மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் இந்த சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு

MR. DEPUTY SPEAKER: I have received the following **message from the Governor:—**

'In pursuance of clause (1) of Article 207 of the Constitution of India, I, Kodardas Kalidas Shah, Governor of Tamil Nadu, hereby give my recommendation for the introduction, in the Tamil **Nadu Legislative Assembly, of the Tamil Nadu Levy of Ryotwari** Assessment on Free-hold Lands Bill, 1972.'

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ.) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1971-72-ம் ஆண்டுக் கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம் மேற்கொண்டு நிகழும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS